ORIGINAL ARTICLE

# திரைப்பட உத்தியைப் பயன்படுத்தி மாணவர்களின் பெயரெச்சம் கற்றலை மேம்படுத்துதல்

## [TIRAIPADA UTTIYAI PAYANPADUTTI MAANAVARKALIN PEYARECCAM KADRALAI MEEMPADUTTUTHAL]

# IMPROVE LEARNING OF *PEYARECCAM* BY USING FILM TECHNIQUE

**சே. வசந்தகுமாரன் [1] / S. Vasantakumaran [1]**

[1]சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா. ⁄ Sultan Idris Education University, Malaysia. மின்னஞ்சல் / Email: vasantakumaran95@yahoo.com

DOI: https://doi.org/10.33306/mjssh/57

**ஆய்வுச் சாரம்**

இலக்கணத்தைப் பிழையின்றியும் புரியும்படியாகவும் மாணவர்களுக்குக் கற்பிப்பதில் ஆசிரியர்களின் பங்கு அளப்பெரியது. ஆகவே, ஆசிரியரின் கற்றல் கற்பித்தலை விளைபயன்மிக்கதாய் அமைத்துக் கொள்ளவும் இலக்கணக் கற்றலைக் குறிப்பாகப் பெயரெச்சம் கற்றலை ஆர்வமூட்டும் வகையில் கொண்டு செல்லவும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பெயரெச்சம் கற்றலில் மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கான காரணங்களைக் கண்டறியும் நோக்கத்திலும் திரைப்பட உத்தியைப் பயன்படுத்தி பெயரெச்சம் கற்றலை மேம்படுத்தும் நோக்கத்திலும் இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்பட்டது. இவ்வாய்வுக்கான தரவுகளைத் திரட்ட பள்ளி ஆசிரியர்கள் நேர்காணல் செய்யப்பட்டனர். மேலும், பதினைந்து மாணவர்களுக்குக் கேள்வி நிரல் வழங்கப்பட்டு மாணவர்களின் சிக்கலுக்கான காரணங்கள் அடையாளம் காணப்பட்டன. மாணவர்களின் ஆளுமையை அறிய முன்னறித் தேர்வும் செய்யப்பட்டது. தொடர்ந்து, திரைபடங்களில் உள்ள வசனங்களையும் பாடல்களையும் நகைச்சுவைகளையும் பயன்படுத்திப் பெயரெச்சம் கற்றல் மேற்கொள்ளப்பட்டுப் பின்னர், பின்னறித் தேர்வு வழங்கப்பட்டு மாணவர்களின் மேம்பாடு அறிப்பட்டது. இலக்கணம் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கு இந்த ஆய்வுக் கட்டுரை பயனளிக்கும் என்று நம்பப்படுகிறது.

**கருச்சொற்கள்:** பெயரெச்சம், திரைப்படம், உத்திகள், இலக்கணம், கற்றல் கற்பித்தல்

**Abstract**

One of vital role of language teachers is teaching students to understand grammar accurately. Therefore, the study was undertaken to make the teachers' learning effective and to make grammar learning particularly noun learning. The paper was written to identify the causes of students' problems in learning adjectives and to promote learning adjective using film technique. School teachers were interviewed to collect data for this study. In addition, fifteen students were given a questionnaire and the causes of the problem were identified. A pre-test were given to determine the status of the respondents. Subsequently, after the adjective learning was done using the subtitles, songs and jokes in the films, a post-test was given and the student's improvement was well seen. It is hoped that this study will be useful for teachers who teach grammar.

**Keywords:** Participle, Films, Technique, Grammar, Teaching and Learning

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 30th June 2019, revised 1th August 2019, accepted 30th August 2019

## முன்னுரை

மலேசியாவில் பல ஆண்டுக் காலமாகத் தமிழ்மொழிக் கல்வி இருந்து வருகிறது. தொடக்கப் பள்ளியில் மட்டுமின்றி இடைநிலைப்பள்ளிகளிலும் தமிழ்மொழிப் பாடத்தைக் கருத்தூன்றிக் கற்க வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. (இராஜேந்திரன், 2008)[1]. அவ்வகையில் தொடக்கப் பள்ளிகளிலும் இடைநிலைப் பள்ளிகளிலும் தமிழ்மொழிப் பாடம் கற்பிக்க முறையான கலைத்திட்டம் வரையறுத்து மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டு வருகிறது (கிங்ஸ்டன் பால் தம்புராஜ், (2016)[2].

மலேசிய விடுதலை அடைந்த காலம் தொடங்கி இன்றுவரை பாடத்திட்டம் பல மாற்றங்களை அடைந்து வந்துள்ளது. தொடக்கக் காலத்தில் தமிழ்மொழிக்குப் பாடத்திட்டம் வகுக்கப்படவில்லை. பிறகு, 1965இல் கல்வி அமைச்சு, இடைநிலைப்பள்ளி தமிழ்ப் பாடத்திட்டம் என்ற பெயரில் மூன்று பக்கங்களுக்கு ஆங்கில மொழியில் பாடத்திட்டத்தை வரைந்து கொடுத்தது. அதன் பின்னர், கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு 1988ஆம் ஆண்டில் இடைநிலைப் பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட பாடத்திட்டம் என்ற பெயரில் முறையான கலைத்திட்டத்தை வரையறுத்துக் கொடுத்தது (சாமிக்கண்ணு, 2015)[3].

பின்னர், 2003ஆம் ஆண்டில், இடைநிலைப் பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு, மறுசீரமைக்கப்பட்ட இடைநிலைப்பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்டத்தில் பிறரிடைத் தொடர்புதுறைக்கான கற்றல்பேறு, தகவல் துறைக்கான கற்றல்பேறு, இலக்கியத்துறைக்கான கற்றல்பேறு ஆகிய மூன்று கற்றல்பேறுகளுடன் 19 மொழித்திறன்கள் அடங்கியுள்ளன. இவ்வாண்டில் படிவம் மூன்றிலும் நான்கிலும் ஐந்திலும் இப்பாடத்திட்டத்தைப் பயன்படுத்தியே தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல் நடைபெற்று வருகிறது. 2017ஆம் ஆண்டில் இடைநிலைப்பள்ளிகளுக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு இன்று படிவம் ஒன்றிலும் இரண்டிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது (அருள்நாதன் விசுவாசம், (2019)[4].

மேலும், நடைமுறையில் உள்ள இவ்விரு தமிழ்மொழிப் பாடத்திட்டத்தில் மாணவர்கள் இலக்கணத் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் (மனோன்மணி தேவி, 2016)[5]. ஐந்தாம் படிவ மாணவர்கள் அமரும் மலேசியக் கல்வி சான்றிதழ் தேர்வில் பெயரெச்சம் தொடர்பான இலக்கணக் கேள்விகள் கேட்கப்பட்டு மதிப்பிட்டும் வருகிறது. எனவே, இவ்வாய்வில் ஐந்தாம் படிவ மாணவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மாணவர்களின் பெயரெச்சம் கற்பித்தலை மேம்படுத்தும் வண்ணம் ஆய்வாளர் இவ்வாய்வினை மேற்கொண்டுள்ளார்.

## ஆய்வு நோக்கம்

இந்த ஆய்வின் பொது நோக்கமானது திரைப்பட உத்தியைப் பயன்படுத்தி மாணவர்களின் பெயரெச்சம் கற்றலை மேம்படுத்துதலாகும். அவ்வகையில், இந்த ஆய்வு இரண்டு சிறப்பு நோக்கத்துடன் செயல்பட்டது. முதல் நோக்கமானது ஐந்தாம் படிவ மாணவர்கள் பெயரெச்சம் கற்றலில் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கான காரணங்களைக் கண்டறிதலாகும். இரண்டாவது நோக்கமாகத் திரைப்படப் பாடல், திரைப்பட வசனம், நகைச்சுவை வசனம் ஆகிய மூன்று உத்திகளைப் பயன்படுத்தி மாணவர்களின் பெயரெச்சம் கற்றலை மேம்படுத்துதலாகும்.

## ஆய்வு நெறிமுறைகள்

பாதாங் பாடாங் மாவட்டத்தில் உள்ள ஓர் இடைநிலைப்பள்ளியில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுச் செயலாய்வு முறையில் மேற்கொள்ளப்பட்டது. செயலாய்வு செயல்முறையில் மொத்தம் நான்கு நெறிமுறைகள் இடம்பெற்றுள்ளன. அவை மீட்டுணர்தல், திட்டமிடுதல், செயல்படுத்துதல், உற்றுநோக்குதல் ஆகும். அவ்வகையில், ஆய்வாளர் இவ்வாய்வின் மேற்கொள்ள முதலில் மாணவர்களின் சிக்கலை மீட்டுணர்ந்தார்.

ஐந்தாம் படிவ மாணவர்கள் பெயரெச்சம் கற்றலில் எதிர்நோக்கம் சிக்கள்களுக்கான காரணங்களை ஆய்வாளர் மீட்டுணர்ந்தார். பிறகு, ஆய்வாளர் அச்சிக்கல் களைய நடவடிக்கைகளைத் திட்டமிட்டார். ஆய்வாளர் திட்டமிட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து ஆறு வாரங்களுக்குச் செயல்படுத்தப்பட்டன. பின்னர், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விளைபயன் ஆய்வாளரால் உற்றுநோக்கப்பட்டுப் பின் ஆய்வு முடிவுகள் கண்டறியப்பட்டன. மேலும் ஆய்வாளர் இவ்வாய்வில் அளவுசார் முறையையும் பண்புசார் முறையையும் பயன்படுத்தியுள்ளார்.

ஆய்வாளர் மாணவர்கள் பெயரெச்சம் கற்றலில் எதிர்நோக்கும் சிக்கலுக்கான காரணங்களைக் கண்டறிய கருத்தறி வினா தொகுதியைப் பயன்படுத்தினார். மாணவர்களின் கருத்துகளைத் திரட்ட இந்தக் கருத்தறி வினா தொகுதி பயன்படுத்தப்பட்டது. மேலும், மாணவர்களின் சிக்கலுக்கான காரணங்களையும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களையும் கண்டறிய ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பள்ளியின் ஆசிரியரையும் நேர்காணல் செய்யப்பட்டது. இவ்விரு கருத்துகளை ஆய்வாளர் பண்புசார் முறையில் இவ்வாய்வில் விளக்கியுள்ளார்.

ஆய்வாளர் மாணவர்களுக்கு வழங்கிய முன்னறித் தேர்வு முடிவுகளையும் பின்னறித் தேர்வு முடிவுகளையும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்த நடத்தப்பட்ட ஆறு நடவடிக்கைக்கான முடிவுகளையும் விளக்க அட்டவணையின் மூலம் அளவுசார் அணுகுமுறையைப் பயன்படுத்தியுள்ளார். முன்னறித் தேர்வின் முடிவையும் பின்னறித் தேர்வின் முடிவையும் அளவுசார்து ஒப்பிட ஒப்பிட்டியல் முறையையும் ஆய்வாளர் கையாண்டார்.

**ஆய்வுக் கண்டுபிடிப்பு**

முதலில், ஆய்வாளர் மாணவர்கள் பெயரெச்சம் கற்றலில் எதிர்நோக்கும் சிக்கலைக் கண்டறிந்தார். மாணவர்களுக்கு எச்சம் என்ற இலக்கணமே புரியவில்லை என்றும் வினையெச்சத்திற்கும் பெயரெச்சத்திற்கும் உள்ள வேறுபாட்டைக் கண்டறிய முடியவில்லை என்றும் இதன் வழி கண்டறிந்தார். மேலும், ஆசிரியர் மாணவர்களுக்கு இலக்கணப் பாடத்தை ஆர்வத்துடன் கற்றுத் தருவதில்லை என்பதையும் நேர்காணல் வழி அறிந்து கொண்டார். ஆக, மாணவர்களின் பெயரெச்சம் கற்றலை மேம்படுத்த ஆறு வாரங்களுக்கு நடவடிக்கைகளைத் திட்டமிட்டார்.

முதலில், மாணவர்களின் பெயரெச்சம் மீதான ஆளுமையைக் கண்டறிய ஆய்வாளர் முன்னறித் தேர்வை மேற்கொண்டார். மாணவர்களின் மதிப்பெண்கள் மிகவும் குறைவாக இருந்ததை ஆய்வாளர் கண்டறிந்தார். பிறகு, மாணவர்களுக்குத் தொடர்ந்து ஆறு வாரங்களுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அவை கீழே விளக்கப்பட்டுள்ளன. ஆறு வார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின் பின்னறித் ஆய்வாளர் பின்னறித்

தேர்வை மேற்கொண்டார். மாணவர்களின் மதிப்பெண்கள் முன்னறித் தேர்வைவிடப் பின்னறித் தேர்வில் வளர்ச்சி கண்டுள்ளதை ஆய்வாளர் உறுதிப்படுத்தினார்.

நடவடிக்கை 1 - திரைப்பட பாடல்

- ஆய்வாளர் இந்நடவடிக்கையில் திரைப்பட பாடல் உத்தியைப் பயன்படுத்தினார். முதலிம் மாணவர்களுக்குத் திரைப்பட பாடல் வரிகள் கொடுக்கப்பட்டுப் பாடல் ஒலிபரப்பப்பட்டன. மாணவர்கள் அப்பாடலைச் சேர்ந்து பாடியபின் ஆய்வாளர் மாணவர்களை அப்பாடல் வரிகளில் இடம்பெற்றுள்ள பெயரெச்சங்களை அடையாளம் காணப் பணித்தார். மாணவர்களின் பதிகளை ஆய்வாளர் சரிப் பார்த்து மதிப்பெண்கள் குறிப்பெடுத்துக் கொள்ளப்பட்டன. திரைப்பட பாடலில் இடம்பெற்றுள்ள சில பெயரெச்சங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன :
- சிங்க நடை *போட்டு சிகரத்தில்* ஏறு,
- சிகரத்தை *அடைந்தால் வானத்தில்* ஏறு

நடவடிக்கை 2 - திரைப்பட வசனம்

- ஆய்வாளர் இந்நடவடிக்கையில் திரைப்படவசன உத்தியைப் பயன்படுத்தினார். முதலில், ஆய்வாளர் மாணவர்களுக்குத் திரைப்பட வசனத்தை ஒளிபரப்பினார். பிறகு, மாணவர்களுக்கு அத்திரைப்பட வசனங்கள் வழங்கப்பட்டன. ஆய்வாளர், மாணவர்களை அவ்வசனங்களில் உள்ள பெயரெச்சங்களை அடையாளம் கண்டு குறிப்பிட பணித்தார். மாணவர்களின் பதிகளை ஆய்வாளர் சரிப் பார்த்து மதிப்பெண்கள் குறிப்பெடுத்துக் கொள்ளப்பட்டன. திரைப்பட வசனத்தில் இடம்பெற்றுள்ள சில பெயரெச்சங்கள் :
- சிவாஜி : இப்புலவர் கொண்டு *வந்த பாட்டிற்கு* குற்றம் கூறியவன் எவன்?
- சிவாஜி : அது நடந்து முடிந்த கதை. *தொடங்கிய பிரச்சனைக்கு* வாரும்.

நடவடிக்கை 3 - நகைச்சுவை வசனம்

- ஆய்வாளர் இந்நடவடிக்கையில் நகைச்சுவை வசன உத்தியைப் பயன்படுத்தினார். முதலில், ஆய்வாளர் மாணவர்களுக்குத் திரைப்படத்திலுள்ள நகைச்சுவை வசனத்தை ஒளிபரப்பினார். பிறகு, மாணவர்களுக்கு அந்நகைச்சுவை வசனங்கள் வழங்கப்பட்டன. ஆய்வாளர் மாணவர்களை அந்நகைச்சுவையிலுள்ள பெயரெச்சங்களை அடையாளம் கண்டு குறிப்பிட பணித்தார். மாணவர்களின் பதிகளை ஆய்வாளர் சரிப் பார்த்து மதிப்பெண்கள் குறிப்பெடுத்துக் கொள்ளப்பட்டன. நகைச்சுவை வசனத்தில் இடம்பெற்றுள்ள சில பெயரெச்சங்கள்:
- வடிவேலு : இங்கு *நிற்கின்ற கட்சிக்காரர்* முள்ளப்பன்றி முனியாண்டியிடம் தனது தங்கையின் திருமணத்திற்காக ஒரு லட்ச ரூபார் கடனாக வாங்கி இருக்கிறார். பனம் *கொடுத்தக் கட்சிக்காரர்* பணத்தை ஒரு நாள் திருமப கேட்டிருக்கிறார்.

நடவடிக்கை 4 - 6

- ஆய்வாளர் மீண்டும் நடவடிக்கை நான்கில் திரைப்பட பாடலையும் நடவடிக்கை ஐந்தில் திரைப்பட வசனத்தையும் நடவடிக்கை ஆறில் நகைச்சுவை வசனத்தையும் உத்திகளாகப் பயன்படுத்தினார். இம்மூன்று நடவடிக்கையில் மாணவர்கள் ஆய்வாளரின் துணையின்றி பங்கெடுத்தனர். மாணவர்களின் மதிப்பெண்களை ஆய்வாளர் குறிப்பெடுத்துக் கொண்டார்.

## தொகுப்புரை

இவ்வாய்வின் வழி ஆய்வாளர் மாணவர்களின் பெயரெச்சம் கற்றலை மேம்படுத்த மூன்று உத்திகளை அறிமுகப்படுத்தியுள்ளார். திரைப்படம் மாணவர்களை மிகவும் உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் ஈடுப்பட வைக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆக, ஆசிரியர்கள் திரைப்படங்களைக் கொண்டு கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளும் போது மாணவர்களின் புரிந்தல் மேம்படும் என்பதை இவ்வாய்வின் வழி கண்டறிய முடிகிறது. இலக்கணப் பாடத்தைக் கற்றுக் கொள்ளக் கடினத்தையும் சலிப்பையும் காட்டும் மாணவர்களுக்கு இது போன்ற உத்திகளைப் பயன்படுத்துவதால் ஆசிரியரின் கற்பித்தல் விளைப்பயன்மிக்கதாய் அமையும். பெயரெச்சத்தை மட்டுமல்லாது வேறு சில இலக்கணங்களையும் திரைப்படத்தை உத்தியாகக் கொண்டு கற்பிக்கலாம் என்பது ஆய்வாளரின் கருத்தாகும்.

## துணைநூற்பட்டியல் :


1. Rajendran, N, S. (2008). *Tamil Education and Teaching in Malaysia (மலேசியாவில் தமிழ்க் கல்வியும் கற்றல் கற்பித்தலும்).* Kuala Lumpur: Uma Publications.
2. Kingston Paul Tamburaj. (2016). *New approaches in teaching Tamil language (தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள்).* Tanjong Malim: Sultan Idris Education University.
3. Samikkanu, S. (2015). *Speciality of Malaysia Tamil literature – Diaspora Tamil literature (மலேசியத் தமிழ் இலக்கியத்தின் சிறப்பு - புலம்பெயர்ந்தோர் தமிழ் இலக்கியம்).* Tanjong Malim: Muhibbah Publications.
4. Arulnathan Visuvasam. (2019). *Introduction in academic research (கல்வியல் ஆராய்ச்சி: ஓர் அறிமுகம்).* Ulu Kinta: Teachers Training College.
5. Manonmani Devi, A. (2016). *Transplantation of biofilm in Tholkappiyam (தொல்காப்பியத்தில் உயிரீற்று அஃறிணைப் பெயர்ப்புணர்ச்சி).* Kuala Lumpur: Uma Publications.